23-7-1990 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசு நிலை ஆணை எண் 155-ன் கீழ் 5 பேர்கள், 1993 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசு நிலை ஆணை எண் 221-ன் கீழ் 13 பேர்கள். ஆக 223 பேர்களும், மொழி நலம் தொடர்பாக 22 பேர்களும் ஆக 245 பேர்கள் இத் திட்டத்தின்கீழ் அந்த மாவட்டத்திலே பயன் அடைந்திருக்கிறார்கள். நிதிநிலை அடிப்படையிலேதான் அரசு இதைச் செய்ய முடியும். நிதிநிலைக்கேற்ப விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. என். ஆர். ராஜேந்திரன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக அளிப்பார்.

* **திரு. என். ஆர். ராஜேந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 40 மற்றும் 41-வது அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1985–86, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1985-86 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1985-86 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. பொதுக்கணக்குக் குழு, 1985-86 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு 1985-86 ஆம்